


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2025) தலைமைச் செயலகத்தில், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், தேசியக் கல்விக் கொள்கை. பி.எம்.ஸ்ரீ பள்ளிகள், மும்மொழிக்கொள்கை ஆகியவற்றை செயல்படுத்தாத காரணத்தால் கடந்த ஆண்டு சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ஒன்றிய அரசின் 60 சதவீதப் பங்கான 2,152 கோடி ரூபாய் வழங்கப்படாததால், பள்ளி மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, முதலமைச்சர் அவர்களால் அந்நிதி ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து திட்டங்கள் செயல்படுத்த நிதி வழங்கியமைக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.3.2025) முகாம் அலுவலகத்தில், உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனர் பழ. நெடுமாறன் அவர்கள் சந்தித்து, தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக ஏழு மாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டம் நடத்தவுள்ளதையொட்டியும், இந்திய அளவில் இது போன்ற பிரச்சினைகளில் முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்புகளை பாராட்டியும், வாழ்த்துத் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, உலகத் தமிழர் பேரமைப்பின் பொதுச்செயலாளர் எம்.ஜி.கே. நிசாமுதீன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் விரிவுபடுத்தப்பட்ட 1,000 ஒருகால பூஜைத் திட்ட திருக்கோயில்களுக்கு அதற்கான ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 அர்ச்சகர்களிடம் ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.03.2025) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூஜை திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள 17,000 திருக்கோயில்களுக்கான வைப்பு நிதியினை தலா 2.50 இலட்சம் ரூபாயாக உயர்த்திட 85 கோடி ரூபாய் மற்றும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தும் வகையில் கூடுதலாக 1,000 திருக்கோயில்களுக்கு ஒருகால பூஜை மேற்கொள்வதற்கு ஏதுவாக ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் தலா 2.50 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 25 கோடி ரூபாய், என மொத்தம் 110 கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பு நிதியாக முதலீடு செய்யும் விதமாக அதன் தலைமை நிதி அலுவலர் திருமதி பீ. ஜமீலாவிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, இணை ஆணையர் பொ. ஜெயராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

### தொகுதி மறுசீரமைப்பு கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் பங்கேற்றிட

# மாநில முதலமைச்சர்கள் - கட்சித் தலைவர்கள் சென்னை வருகை!

## அமைச்சர்கள் – எம்.பி.க்கள் வரவேற்றனர்!

**சென்னை, மார்ச். 23 –**

**தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக கேரளா, தெலுங்கானா, பஞ்சாப் மாநில முதலமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் சென்னை வந்தடைந்தனர்.**

தொகுதிமறுசீரமைப்புவிவகாரத்தில் கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்பான முதற்கட்ட ஆலோசனைக் கூட்டம் சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (22.3.2025 - சனிக்கிழமை) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அழைப்பினை ஏற்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் சென்னை வந்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் கேரள முதலமைச்சரை நேரில் சென்று வரவேற்றனர்.

**பஞ்சாப் முதலமைச்சர் வருகை!**

இதேபோல, தொகுதி மறுவரையறை குறித்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக, பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் சிங் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவரை, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி என்.வி.என் சோமு ஆகியோர் வரவேற்றனர்.

**தெலுங்கானா முதலமைச்சர் வருகை!**

தெலங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி சென்னை வந்துள்ளார். சென்னை விமான நிலையத்தில் ரேவந்த் ரெட்டியை அமைச்சர் கே.என். நேரு, ஆ.ராசா எம்.பி ஆகியோர் வரவேற்றனர். அதுபோது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை மற்றும் ஐ.ஏ.எஸ் அதிகாரி மதுசூதன் ரெட்டி உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

**கேரள இந்திய கம்யூனிஸ்ட் பினோய் விஸ்வத் வருகை!**

இதேபோல், கேரளாவைச் சேந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி பினோய் விஸ்வத், சென்னை வந்தடைந்தார். விமான நிலையத்தில் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி வரவேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பினோய் விஸ்வம், தொகுதி மறு வரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டம் சென்னையில் நடைபெறவுள்ளது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார். நாடு முழுவதும் பாசிச சித்தாந்தத்தை திணிக்க பா.ஜ.க. முயற்சி செய்து வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

**பஞ்சாப் சிரோமணி அகாலி தளம் பல்விந்தர் சிங் வருகை!**

முன்னதாக பஞ்சாப் மாநிலத்திலிருந்து சிரோமணி அகாலி தளத்தின் நிர்வாகி பல்விந்தர் சிங் மற்றும் பஞ்சாப்பின் முன்னாள் கல்வி அமைச்சர் தல்ஜித் சிங் சீமா ஆகியோர் சென்னையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டத்தில் பங்கேற்க சென்னை வருகை தந்தனர். அவர்களை விமான நிலையத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, அருண் நேரு ஆகியோர் வரவேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சிரோமணி அகாலி தளத்தின் நிர்வாகி பல்விந்தர் சிங், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்பது ஆபத்தானது என்றும், இந்த விவகாரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூட்டியுள்ள கூட்டு நடவடிக்கைக்குழு ஆலோசனைக் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தெரிவித்தார்.

**கேரளா இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பி.எம்.ஏ. சலாம் வருகை!**

தொகுதி மறுவரை கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் கேரள மாநில பொதுச் செயலாளர் பி.எம்.ஏ சலாம், ரயில் மூலம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தார். அவரை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ரயில் நிலையத்திற்கு சென்று நேரில் வரவேற்றார்.

இதேபோல, கேரள காங்கிரஸ் (மாணி) தலைவர் ஜோஸ் மாணி, விமானம் மூலம் கொச்சியில் இருந்து சென்னை வந்தடைந்தார். பிஜு ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த சஞ்சய் குமார் தாஸ் பர்மா, விமானம் மூலம் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரிலிருந்து சென்னை வந்தடைந்தார்.

**தெலுங்கானா பாரதி ராஷ்டிரிய சமிதி – ஒடிசா பிஜூ ஜனதா தளம் நிர்வாகிகள் வருகை!**

இதேபோல, தொகுதி மறுவரையறை தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக தெலுங்கானா மாநிலத்தில் இருந்து பாரதிய ராஷ்டிரிய சமிதி கட்சியின் கே.டி.ராமாராவ், ஒடிசா மாநிலத்தில் இருந்து, பிஜூ ஜனதா தளம் கட்சியின் மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் அமர் பட்நாயக் ஆகியோரும் சென்னை வந்துள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஆ.மணி எம்.பி. சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் உள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்ற தொகுதி மறு சீரமைப்பு கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றிட நேற்று முன்தினம் வருகை தந்த கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. ஆகியோர் வரவேற்றனர்.





நாடாளுமன்ற தொகுதிகளின் மறுசீரமைப்பு தொடர்பாக சென்னையில் நேற்று (22.03.2025) நடைபெறும் கூட்டு நடவடிக்கைக் குழுவின் முதல் கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்த தெலுங்கானா மாநில முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்களை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என் நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை ஆகியோர் நேற்று முன்தினம் (21.03.2025), சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.



நாடாளுமன்ற தொகுதிகளின் மறுசீரமைப்பு தொடர்பாக சென்னையில் நேற்று (22.03.2025) நடைபெற்ற கூட்டு நடவடிக்கைக் குழுவின் முதல் கூட்டத்தில் பங்கேற்க வருகை தந்துள்ள பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களை சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி என்.வி.என்.சோமு ஆகியோர் நேற்று முன்தினம் (21.03.2025) சென்னை விமான நிலையத்தில் வரவேற்றனர்.